மாதிரி வினாத்தாள் / Model Question Paper-2019-20

மேல்நிலை – இரண்டாம் ஆண்டு / HIGHER SECONDARY (SECOND YEAR)

தொழிற்கல்வி / VOCATIONAL EDUCATION

# வேளாண் அறிவியல்

தமிழ் வழி / Tamil version

கால அளவு : 15 நிமிடங்கள் + 2.30 மணி — மொத்த மதிப்பெண்கள்: 70

Time Allowed: 15 minutes + 2.30 hrs — Maximum Marks: 70

**அறிவுரைகள்** :

1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும். படங்கள் வரைவதற்குப் பென்சில் பயன்படுத்தவும்

**Instructions** :

1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the hall supervisor immediately.

2) Only blue or black ink must be used to write and underline. Pencil can be used to draw the diagrams.

## பகுதி – I

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (15x1=15)**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. நீண்ட பகல் நேரத் தாவரங்களுக்கு ____________ மணி நேர தொடர்ச்சியான இருள் தேவை.

அ) 8 – 10 ஆ) 10 -12 இ) 10 – 14 ஈ) 6 – 8

2. பருத்தி மற்றும் புகையிலையில் பக்கக்கிளைகளை ஊக்குவிக்க செய்யப்படும் ஊடுசாகுபடி வேலைக்கு ___________ என்று பெயர்.

அ) மண்அணைத்தல் ஆ) கலவன்நீக்குதல்

இ) நுனிகிள்ளுதல் ஈ) களையெடுத்தல்

3. கரும்பில்அதிகதூர்விடும் இரகங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் பாருக்குப் பார் இடைவெளி ___________ செ.மீ

அ) 75 ஆ) 90 இ) 150 ஈ) 60

4. பயிர் மேம்பாட்டு ஆராய்ச்சியில் சடுதி மாற்றத்திற்கு பயன்படும் மூலிகைப் பயிர்___________

அ) கற்றாழை ஆ) நிலவேம்பு

இ) கண்வலிக்கிழங்கு ஈ) வல்லாரை

5. பயறுவகைத் தாவரங்களோடு தொடர்புடையது ___________

அ) அசோஸ்பைரில்லம் ஆ) பாஸ்ஃபோபாக்டீரியா

இ) அசிட்டோபாக்டர் ஈ) ரைசோபியம்

6. சுற்றுச் சூழலுக்கு உகந்த மருந்து ___________

அ) சைபர்மெத்ரின் ஆ) வேப்பெண்ணெய்

இ) புதைபடிமபாசி ஈ) ஆமற்றும்இ

7. அயல் மகரந்தச்சேர்க்கைக்கு உதவும் நடமாடும் இடுபொருள் ___________

அ) தேனீ ஆ) ஆடு இ) காடை ஈ) நடமாடும் தெளிப்பான்

8. விதை உற்பத்தி செய்யும்போது ஒரு இரகத்திலிருந்து மாறுபட்ட பண்புகளை உடைய பயிர், களைகளை நீக்குதலுக்கு ____________ என்றுபெயர்.

அ) களையெடுத்தல் ஆ) கலவன் நீக்குதல்

இ) விலகுதூரம் பராமரித்தல் ஈ) மகரந்தம் நீக்குதல்

9. நீரியல் வளர்ப்பை இப்படியும் குறிப்பிடலாம்.

அ) இயற்கை வேளாண்மை ஆ) மண்ணில்லா விவசாயம்

இ) நானோ தொழில்நுட்பம் ஈ) சொட்டு நீர்ப்பாசனம்

10. இயற்கை வேளாண்மையோடு தொடர்புடையவர் இவர்

அ) மா.சு.சுவாமிநாதன் ஆ) நார்மன்போர்லாக்

இ) கோ. நம்மாழ்வார் ஈ) கே.வி.திம்மன்

11. அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உறுதுணை புரிவது ____________

அ) தட்டான் ஆ) தேனீ

இ) வண்ணத்துப்பூச்சி ஈ) அந்துப்பூச்சி

12. காப்பக சாகுபடி என்பது பயிரை சுற்றியுள்ள____________மாற்றி வளர்க்கும் உத்தியாகும்.

அ) வானிலை ஆ) தட்பவெப்பநிலை

இ) நுண் வானிலை ஈ) வானிலை முன்னறிவிப்பு

13. தேசிய வேளாண் சந்தை ____________ ஆகும்.

அ) ஒழுங்கு முறையற்ற சந்தை ஆ) இணையச் சந்தை

இ) சிறப்பு சந்தை ஈ) மூலதன சந்தை

14. பருத்தி இழைநோய் ____________ உயிரினத்தில் காணப்படுகிறது.

அ) ஆடு ஆ) மாடு இ) மீன் ஈ) கோழி

15. புவியில் இருப்பிடத்தை அறியப் பயன்படும் கருவிக்கு ____________ என்று பெயர்.

அ) புவியிடங்காட்டி ஆ) செயற்கைக்கோள்

இ) தரவுத்தளம் ஈ) உணர்வி

## பகுதி II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினாஎண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **(10x3=30)**

16. நெற்பயிரின் முக்கியமான நீர்த்தேவைப் பருவங்கள் யாவை?
17. கரும்பின் முதிர்ச்சியை எவ்வாறு கண்டறியலாம்?
18. மா சாகுபடியில் அடர் நடவு முறை பற்றி குறிப்பு வரைக.
19. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் என்றால் என்ன?
20. மரபியல் முறையில் எவ்வாறு பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளலாம்?
21. ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வேளாண்காடுகளின் பங்கு என்ன?
22. சடுதிமாற்ற இனப்பெருக்கம் – குறிப்பு வரைக.
23. வளங்குன்றா வேளாண்மையின் நோக்கங்கள் யாவை?
24. இயற்கை வேளாண்மை – வரையறுக்க.
25. ஆண் தேனீக்களைப் பற்றி குறிப்பு வரைக.
26. மாறுபட்ட சூழ்நிலையில்பதப்படுத்துதல் பற்றி குறிப்பு வரைக.
27. கலப்படப் பொருள் என்றால் என்ன? உதாரணம் தருக.
28. ஆடுகளில் ஏற்படும் அடைப்பான் நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

## பகுதி – III

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினாஎண் 35-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **(5x5=25)**

29. செம்மை நெல்சாகுபடியின் நன்மைகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

30. பூச்சிக்கொல்லி மருந்துகளால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

31. மண்ணில்லா விவசாயத்தின் அவசியம் பற்றி எழுதுக.

32. நவீன நாற்றங்காலின் அவசியம் என்ன?

33. அக்மார்க் பற்றி எழுதுக.

34. கால்நடைகளை நோய்கள் வருமுன் எவ்வாறு பாதுகாப்பது?

35. நிலக்கடலையில் ஜிப்சம் இடுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

## பகுதி – IV

**கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடையளிக்கவும்.**

**( 2x10=20)**

36. பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் யாவை? (அல்லது)

    வேளாண்மையில் செயற்கைக்கோள் மற்றும் தொலை உணர்வியலின் பயன்பாடு பற்றி விவரி.

37. முருங்கையில் எவ்வாறு விதை உற்பத்தி செய்ய வேண்டும்?

    (அல்லது)

    ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நன்மைகளை விவரி.

21/8/19
(K. Srinivasan)

21/8/2019.